# நாள்தோறும் நெகிழ்வுதான்... வாழ்வெல்லாம் நினைவுதான்!

முதல்வர் மு.க.ஸ்டாலின்
தலைவர், தி.மு.க.



அரும்பெரும் தலைவர்கள் பலரும் வருகை தந்த கோபாலபுரம் இல்லத்தில் வளர்ந்த எனக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடனான நெகிழ்வான நினைவுகள் என்று எதைச் சொல்வது, எதை விடுவது? ஒரு தந்தையாக என்னை வளர்த்தெடுத்தவர். அதைவிட இயக்கத்தின் தலைவராக இருந்து என்னை வார்த்தெடுத்தவரும் அவரே.

சிறுவயதில், என் உடன்பிறந்தவர்களுடனும் உறவினர்களுடனும் கோபாலபுரம் இல்லத்தில் தாய்தந்தையின் முகம் கண்டு மகிழ்ந்திருந்த நான், இளமைப் பருவம் துளிர்விடும் போதே அரசியல் பொதுவாழ்வில் ஆர்வம் கொண்டவனாக, அக்கறை உடையவனாக மாறினேன் என்றால், அதற்கு காரணம், தமிழ்நாட்டின் தலைப்பெழுத்தைத் தீர்மானிக்கும் இடமாக கோபாலபுரம் இல்லத்தை தலைவர் கலைஞர் உருவாக்கி வைத்திருந்ததுதான்.

கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. என்ற அமைப்பைத் தொடங்கியபிறகு, அரசியல் ஆர்வம் மேலும் அதிகமானது. கழகத்தின் கொள்கைப் பிரச்சார நாடகங்களில் பங்கேற்று நடிக்க ஆரம்பித்தேன். அஞ்சுகம் நாடக மன்றத்தின் சார்பில், 'முரசொலி' அடியார் அவர்கள் எழுதிய 'முரசே முழங்கு' என்ற நாடகத்தில், நான் தலைவர் கலைஞர் அவர்கள் வேடத்தில் நடித்தேன். பின்னாளில், திரைத்துறையில் நல்ல பல கதாபாத்திரங்களை ஏற்று நடித்த கலைஞர்கள் அந்த நாடகத்தில் என்னுடன் பங்கேற்றிருந்தனர்.

1971இல் 'முரசே முழங்கு' நாடகத்தின் 40ஆவது நிகழ்வு நிறைவடைந்தபோது, சென்னை திருவல்லிக்கேணி என்.கே.டி. கலா மணிமண்டபத்தில் முதல்வர் கலைஞர் தலைமையில் விழா நடைபெற்றது. புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்கள் அதில் பங்கேற்று வாழ்த்துத் தெரிவித்தார். நாடகத்தில் என்னுடைய கதாபாத்திரத்தைப் பாராட்டி, தலைவர் கலைஞர் அவர்கள் எனக்கு கணையாழி அணிவித்தபோது, 1959-ல் சென்னை மாநாகராட்சித் தேர்தலில் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்கு காரணமான தலைவர் கலைஞர் அவர்களுக்கு பேரறிஞர் அண்ணா கணையாழி அணிவித்த நிகழ்வு நெஞ்சில் நிழலாட, நெகிழ்ந்து போனேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் பேசும்போது, **"இந்த நாடகம் இன்று நிறைவு பெறுகிறது என்று நான் கூறுவதற்குக் காரணம், ஸ்டாலின் இந்த வேலையைத் தொடரக் கூடாது என்பதற்காகத்தான். புராணக்காரர்கள் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் விடையார்த்தி உற்சவம் என்று சொல்லலாம். அதாவது, கோவில்களில் உற்சவங்களையெல்லாம் முடித்து கடைசித் திருவிழாவாக விடையார்த்தி உற்சவத்தை நடத்துவார்கள். அதைப் போல இந்த நாடகம் இன்று நடத்தப்படுகிறது என்று கருதுகிறேன்.**

**குடும்பமே இயக்கப் பணிகளில் ஈடுபடுவதை எண்ணுகிற நேரத்தில் ஒரு பக்கத்தில் மகிழ்ச்சி அடைகிறேன். அதே நேரத்தில் எப்படி நான் என்னுடைய தாய் தந்தையருக்கு அடங்காத பிள்ளையாக இருந்தேனோ, இந்த இயக்கத்தில் ஈடுபட்டேனோ அதைப் போல என்னுடைய பிள்ளைகளும் இருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது நான் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனைதான் எனக்கு கிடைத்திருக்கிறது என்று கருதுகிறேன். அந்தத் தண்டனை தமிழ்நாட்டை வாழ வைக்கிற காரியத்திற்கு உறுதுணையாக இருப்பதால் இப்படிப்பட்ட தண்டனைகள் அடிக்கடி கிடைக்க வேண்டுமென்று எண்ணினாலும் கூட, ஸ்டாலின் போன்றவர்கள் கொஞ்சம் ஒழுங்காக முறையாகப் படித்து, எனக்கு இருக்கிற ஒரே ஒரு குறை (கல்லூரிப் பட்டம் பெறாதது) அவர்களுக்கு இல்லாத அளவில் அவர்கள் படிக்க வேண்டும்"** என்று தலைவர் உணர்ச்சிப்பூர்வமாகக் குறிப்பிட்டுப் பேசினார்.

புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர் அவர்கள் என்னுடைய நடிப்பாற்றலையும், நாடகத்தின் கருத்தையும் பாராட்டிவிட்டு, **"தான் பெற முடியாத கல்லூரிக் கல்வியை ஸ்டாலினும் இழந்துவிடக்கூடாது என்று கலைஞர் சொன்னார். அதை அவர் எவ்வளவு வேதனையோடு சொன்னார் என்பதை ஸ்டாலின் உணர வேண்டும். ஒரு தந்தை நூறு பக்கங்களில் மகனுக்கு எழுத வேண்டிய கடிதத்தை அவர் ஒரு வரியில் குறிப்பிட்டார்"** என்று தலைவர் கலைஞர் அவர்களின் ஏக்கத்தை எம்.ஜி.ஆர். அவர்களும் தன் உரையில் எடுத்துரைத்தார்.

'முரசே முழங்கு' நாடகம் நிறைவு பெற்றாலும் என்னுடைய இயக்கப் பணியும், கலைப்பணியும் தொடர்ந்து கொண்டேதான் இருந்தன. 1971-ல் கோவையில் நடைபெற்ற கழகத்தின் மாணவர் மாநாட்டின் தலைவர் அண்ணன் எல்.கணேசன் அவர்கள் உரையாற்றும்போது, "மாணவர் பட்டாளம் உயிர்த்தியாகம் உள்பட எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருந்து இனம், மொழி காக்கும் வீரர்களாக வேண்டும்" என்றார். நான், "எனக்கு இரண்டு நிமிடங்கள் பேச வாய்ப்பு தாருங்கள்" என்று கேட்டு வாங்கிப் பேசினேன்.

**"என்னுடைய தந்தைக்கு நான்கு ஆண் பிள்ளைகள் இருக்கிறார்கள். அந்த நான்கு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளை போய்விடுவதால் என்னுடைய தந்தை நிச்சயம் கவலைப்படமாட்டார். அதுவும் மொழிக்காக, ஒரு இனத்திற்காக தனயனை இழந்த தந்தை என்று என்னுடைய தந்தைக்குப் பாராட்டு கிடைக்கும். எனவே எத்தகைய தியாகத்தை செய்வதற்கும் தயார்.. தயார்"** என்றேன்.

நான் பேசுவதை உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டிருந்தார் மேடையிலிருந்த தலைவர் கலைஞர். அவர் உரையாற்றும்போது, **"ஒழுங்காகப் படிக்காமல் பட்டம் பெறாமல், அரசியலில் ஈடுபட்டால் என்னைப் போல முதலமைச்சராக ஆகலாம் என்று யாரும் தவறாகக் கருதிக்கொள்ளாதீர்கள். இது விதிவிலக்கு. விதிவிலக்கு, வழிகாட்டிகள் ஆகாது. எனவே விதிவிலக்குகளை வழிகாட்டிகளாக எடுத்துக் கொள்ளக்கூடாது"** என்று மீண்டும் படிப்பையே வலியுறுத்தினார். பட்டம் பெற்று, பண்பாளன் என்ற பெயர் பெற்று, பாரோர் புகழக் குடும்பத்தின் பெருமையை உயர்த்துவதுதான் பெற்றெடுத்தவர்களுக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு என்றார் தலைவர்.

'கல்வியே அழிவில்லாத செல்வம்' என்பதால்தான் கல்வி உரிமைக்காகவும், அதனடிப்படையிலான வேலை உரிமைக்காகவும் திராவிட இயக்கம் தோன்றியது. பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட தலைவர்கள் அனைவரும் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி, அந்த வாய்ப்பை அனைத்து மக்களும் பெறுவதற்காக அயராது பாடுபட்டு வெற்றி பெற்றனர். என்னுடைய தந்தையாக என் பொதுவாழ்வுப் பணிகளில் தலைவர் கலைஞர் அவர்கள் மனநிறைவு கொண்டாலும், இயக்கத்தின் தலைவராக இந்த இனத்தை வாழவைக்கும் தலைவராக என்னுடைய கல்வி மீதான அவரது அக்கறை எப்போதும் தொடர்ந்தது.


**நெருக்கடிநிலைக் காலத்தில் மிசா சிறைவாசத்தில், கொடூரத் தாக்குதலை எதிர்கொண்டேன். என் மீது விழுந்த அடிகளில் பலவற்றை அண்ணன் சிட்டிபாபு தாங்கிக்கொண்டு, தன் உயிரைக் கொடுத்து என் உயிரைக் காத்தார். அந்தச் சிறைவாசத்தின்போது, உரிய அனுமதி பெற்று, சென்னை மாநிலக் கல்லூரியில் தேர்வுகளை எழுதினேன். பின்னர், பி.ஏ. பட்டம் பெற்றேன். அதன் மூலம், தந்தையின் - அல்ல.. அல்ல.. - தலைவரின் எண்ணத்தையும் எதிர்பார்ப்பையும் நிறைவேற்றினேன்.**

அவருடைய விருப்பப்படி, கல்லூரியில் பட்டம் பெற்றாலும், நான் அவரிடம் பெற்ற உயர்ந்த பட்டம் என்பது, **"ஸ்டாலின் என்றால் உழைப்பு..உழைப்பு.. உழைப்பு"** என்று எனக்கு தலைவர் அவர்கள் அளித்த அங்கீகாரம்தான். அந்த உழைப்பும் அவரிடம் கற்றதுதான். அதை இன்றளவும் தமிழ்நாட்டு மக்களுக்காக வழங்கிக் கொண்டிருக்கிறேன். **உயர்கல்வியில் முன்னணி பெற்றுள்ள தமிழ்நாடு இன்னும் பல படிகள் முன்னேறி, உலகின் உயர்கல்வித் தலைநகராகத் தமிழ்நாடு திகழவேண்டும் என்றும், தமிழ்நாட்டு மாணவர்களுக்கு நிகரானவர்கள் உலகில் இல்லை என்று கூறும் நிலை வரவேண்டும் என்பதற்காகவும் உழைத்துக் கொண்டிருக்கிறேன்.**

அந்த உந்துவிசையை எனக்கு இன்றும் வழங்கிக்கொண்டிருப்பது தலைவர் கலைஞரின் அன்றைய பேச்சுதான்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெயரை உச்சரிக்கும்போதே நெகிழ்கிறேன். அவர் நினைவுகளுடேனேயே என் வாழ்வைத் தொடர்கிறேன்.**

## இராமானுசரும், திராவிட வேதமும்!



ஆழ்வார்களுடைய நாலாயிர திவ்வியப் பிரபந்தம், திராவிட வேதம் என்று யாரால் சொல்லப்பட்டதென்றால், இராமானுசரால் சொல்லப்பட்டது. அந்தத் திராவிட வேதம் இன்றைக்கு வைணவக் கோவில்களில் எல்லாம் பாடப்படுகிறது, படிக்கப்படுகிறது என்றால், அதற்கு மூல காரணமாகத் திகழ்பவர் இராமானுசர்தான் !

அவர் ஆன்மிகவாதிதான். ஆன்மிகவாதி என்றாலுங்கூட, அந்த ஆன்மிகத்தோடு கலந்து அவர் அளித்த கருத்து சாதாரணமானதல்ல.

உத்தமர் காந்தி அடிகள், ஆலயப் பிரவேசம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து - அதை நிறைவேற்றுவதற்கு முன்பு - 850 ஆண்டுகளுக்கு முன்பு அதை கர்நாடக மாநிலத்திலே நடத்திக் காட்டியவர் இராமானுசர் அவர்கள் ஆவார்கள்.

கர்நாடக மாநிலத்தில் திருநாராயணபுரம் என்று அழைக்கப்பட்டு - இன்றைக்கு மேலக்கோட்டை என்று அழைக்கப்படுகின்ற அந்த ஊர்க் கோவில்களில் ஆதி திராவிடர்கள் - தாழ்த்தப்பட்ட சாதிக்காரர்கள் நுழையக் கூடாது என்ற தடையை அகற்றி - ஆலயப் பிரவேசத்தை, காந்தி அடிகளுக்கு 850 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திக் காட்டிய பெருமை ஒருவருக்கு உண்டென்றால், அது இராமானுசர் ஒருவருக்குத்தான் உண்டு. அத்தகைய சீரிய, செழுமிய, புரட்சிகரமான கருத்துகளுக்குச் சொந்தக்காரராக அவர் விளங்கினார் !

**- கலைஞர்**